**செய்தி வெளியீடு எண். 35** **நாள்: 18.01.2018**

**துப்புரவு பணியாளர்களுக்கான தேசிய ஆணையத்தின் மாண்பமை உறுப்பினர் வருகை - மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

திருவள்ளூர் மாவட்டத்திற்கு துப்புரவு பணியாளர்களுக்கான தேசிய ஆணையத்தின் மாண்பமை உறுப்பினர் திரு.ஜெகதீஷ் ஹேர்மனி அவர்கள் வரும் 19.01.2018 அன்று வருகைதந்து துப்புரவு பணியாளர்கள் தொடர்பான சமூக பொருளாதாரம், வாழ்க்கைத்தரம், வேலை, பணி மற்றும் கல்வியின் நிலை, அவர்களைச் சார்ந்தோர்களின் நிலை ஆகியவைகள் தொடர்பாக திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் காலை 10 மணியளவில் ஆய்வு மேற்கொள்ள உள்ளார். மேற்படி ஆய்வில் திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் துப்புரவு பணியாளர் அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்ள உள்ளார்கள் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**